

ரி பிரதி ரூ.5/-
ண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

சிரியர்
அர்ஜுனன்

அக்டோபர்
2006
மரம் 6
கனி 11

## கிறிஸ்துவின் வசனம் மாத இதழின்
## இருபத்துநான்காவது வாசகர் கருத்தரங்கு

***வாசகர்களுக்கு,***

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு செங்கல்பட்டு மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2005 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★இருபத்துநான்காவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் : அக்டோபர் 28 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் : கிறிஸ்துவின் சபையார்கூடுமிடம் 273/2 கிறிஸ்துவின் சபை தெரு, கே.கே.நகர், செங்கல்பட்டு (P.O), செங்கல்பட்டு மாவட்டம்,**

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

**S. பலராமா**


***9994454724***

**வாருங்கள்! பங்குபெறுங்கள்!! தெரிந்து கொள்ளுங்கள்!!!**


## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி




**உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மற்றும்**




*செய்தியாளர்*

**B. அர்ஜுனன்**




**உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.**

**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**
**Phone: 04543 263278 Cell: 9443558041**


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் - 6** **அக்டோபர் - 2006** **கனி - 11**


ஆசிரியருரை

## உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்

## *Possess Ye Your Souls*



உலகத்திலே மிகவும் விலையேறப்பெற்றது ஆத்துமா தான். அதை எந்த ஒரு மனிதனும் விலை கொடுத்து வாங்கமுடியாது. எல்லா ஆத்துமாவும் கர்த்தருடையது. ஆக ஆத்துமாவை காக்கிறவர்கள் ஞான முடையவர்கள். எருசலேமின் அழிவைக் குறித்து கர்த்தர் முன்னுரைக்கும்போது: "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்றார் (லூக்.21:19). மனிதன் ஒவ்வொருநாளும் தங்களுடைய உடைமைகளைக் காக்க மறப்பதில்லை. ஆனால் ஆத்துமாவைக் காக்க மறந்துபோகின்றனர். ஆத்துமாவைக் காப்பது எப்படி? நாம் ஏன் அதைக் காத்துக்கொள்ளவேண்டும்? என்ற கேள்வி எழும்புகிறது.

மேற்கண்ட வசனத்திலே நாம் பார்த்தபடி பொறுமையினாலே ஆத்துமாவைக் காத்துக்கொள்ளமுடியும். பொறுத்தார் பூமியாள்வார் என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நம்முடைய வாழ்க்கையில் பொறுமை மிக அவசியமான ஒன்று. சில காரியங்களை நினைக்கும்போது என்னால் பொறுமையாக இருக்கமுடியாது என்பீர்கள். ஆனால் வேதம் நாம் பொறுமையாயிருக்க கற்றுக்கொள்ளவேண்டும் என்று போதிக்கிறது. ஒரு சிலருக்குப் பதிலுக்குப் பதில் செய்யாவிட்டால் தூக்கம் வராது. அப்படி பதிலுக்குப் பதில் செய்வதாலே என்ன ஏற்படுகிறது? வன்முறை வெடிக்க ஆரம்பிக்கிறது. இதனால் யாவருக்கும் சமாதான குறைவு ஏற்படுகிறது. பொறுமைக்கு எடுத்துக்காட்டாக வேதாகமத்தில் யோபுவைப் பாருங்கள். "இதோ, பொறுமையா யிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபுவின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்: கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறாரே" (யாக்.5:11).

யோபுவிற்கு இருந்த எல்லாம் பறிபோனபோதிலும் யோபு தன்னுடைய உத்தமத்திலே உறுதியாயிருந்தார். "இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை" (யோபு 1:22). இன்றைக்கு சின்ன சின்ன பாடுகள் வந்தவுடனே தேவனை துஷிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். யோபுவோ பொறுமையோடிருந்து தேவனுடைய ஆசீர்வாதங்களை இரட்டிப்பாக பெற்றுக்கொண்டார்.

**ஆவிக்குரிய கனிகளிலே ஒன்று நீடிய பொறுமை.** ஒரு கிறிஸ்தவன் குறிப்பாக இந்த ஆவிக்குரிய கனிகள் ஒன்பதையும் பெற்றவனாக இருக்கவேண்டும். இதில் ஒன்று குறைய காணப்படுமேயானால் அவன் தேவசமூகத்தில் குறைவானவனே. அன்பானவர்களே, இந்தக் கனிகளை உடையவர்களாயிருந்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தவறாதீர்கள். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்தி லிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" (யாக்.1:17-21). பேசுகிறவிஷயத்திலே வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிவிடக்கூடாது. நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறபடியால் பேசுகிறதற்குப் பொறுமையாயிருக்க வேண்டும். துதித்தலும் சபித்தலும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது. அதினாலே ஒருவரை சபிக்கிறோம், அதினாலே தேவனை துதிக்கிறோம். நாவை உண்டாக்கினவர் நன்மைக்காகவே உண்டாக்கினார். நல்லவைகளையே பேசவேண்டும். முத்துக்களை சிதறவிட்டால் சேர்ப்பது கடினம் அதைப்போல வார்த்தைகளை விட்டுவிட்டால் சேர்ப்பது கடினம். ஒரு வார்த்தை கொல்லும் ஒரு வார்த்தை வெல்லும் என்பார்கள். Hear much speak little. எனக்கு அன்பானவர்களே, உங்களுடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

**ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் செய்கிறவர்கள் தேவனுடைய தாசர்கள் ஆகையால்** அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அடங்கவேண்டு மென்று எபிரெய ஆசான் கூறுகிறார்: "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்து மாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான

படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபி.13:17). ஒரு கம்பெனியில் வேலைசெய்கிறவன் அந்தக் கம்பெனி Product -க்காக பரிந்து பேசுகிறான். இது மிக நன்றாக இருக்கும், வாங்கிப் பாருங்கள், ஏதாவது Mistake என்றா நான் Guarantee என்று சொல்லுகிறான். அதைப்போல விசுவாசிகளுக்காக குறிப்பாக அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாக ஊழியர்கள் இருந்து கொண்டு செயல்படுகிறார்கள். நான் என்ன செய்வது அவன் விழுந்துபோனான் என்று கர்த்தரிடம் ஒரு ஊழியன் சொல்லமுடியாது. அவன் கணக்குக் கொடுக்கவேண்டியவனாக இருக்கிறான். ஆகையால் மந்தையைக் குறித்த கரிசனை ஒரு ஊழியனுக்கு உண்டு.

**ஒருவன் எவ்வளவு காலம் பொறுமையாயிருக்கவேண்டும்?** வசனம் சொல்லுகிறது: "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடியபொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக்.5:7,8). ஒரு நாட்டிற்கு எல்லையுண்டு ஆனால் பொறுமைக்கு எல்லையில்லை. கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக யாக்கோபு ஒரு விவசாயியைக் காண்பிக்கிறார்: அவன் விதையை விதைத்து மறுநாளே அவன் அறுவடைக்கு தயார் ஆவதில்லை. ஒவ்வொருநாளும் தான் விதைத்த விதையை கண்காணிக்கிறான், கொத்துகிறான், எருப்போடுகிறான், வேலியடைக்கிறான், நீர்பாய்ச்சுகிறான், காவல்காக்கிறான் இவ்வளவு கடினப்பட்டு, பாடுபட்டு நீடிய பொறுமையோடிருந்து பலனைப்பெறும்படி காத்திருக்கிறான். அந்தப்படியே நீடிய பொறுமையாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் வாடாத ஜீவகிரீடத்தைத் தருவார் என்ற நம்பிக்கையோடிருந்து இருதயங்களை ஸ்திரப்படுத்தவேண்டும். மேலும் "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று 1தெச.5:23-ல் பவுல் குறிப்பிடுகிறார். ஆவியிலே நன்றாகத்தான் இருக்கிறோம் ஆவிக்குரிய சபைக்கு செல்கிறோம் என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாகக் காக்கப்படவேண்டும். அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் வருகையிலே அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவோம். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. அவர் பரிசுத்தரா யிருக்கிறதுபோல ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆகையால் அநுதினமும் பரிசுத்தத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கர்த்தருக்குள் வளர்ந்து பெருகுங்கள்.

**நம்முடைய ஆத்துமாவை நாம் ஏன் காக்கவேண்டும் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது அல்லவா?** அதற்கான விடையை நாம் ஆராயும்போது ஆத்துமாக்களைப் பாதுகாக்காமற்போன இரண்டு நபர்களைக் குறித்து கர்த்தர் நமக்கு மிகத்தெளிவாக போதிக்கிறார். ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். "தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்; அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:20). தேவனிடத்தில் ஐசுவரியவான்களாயிராமல், தங்களுக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவர்கள் இப்படியே இருக்கிறார்கள். ஆத்துமாக்களைக் குறித்த கரிசனையில்லாமல் அவைகளைக் காக்கத் தவறிவிடுகிறார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்?

மற்றொருவனைக் குறித்து நாம் தியானிக்கும்போது; ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்று பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். "அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்" (லூக்.16:24). இவன் பூமியில் இருந்த காலத்தில் சம்பிரமமாய் வாழ்ந்து தன் ஆத்துமாவைக் காக்க மறந்தான். லாசருவோ ஆத்துமாவைக் காத்துக்கொண்டான். ஆத்துமாவைக் காக்காமற்போனால் "அங்கே அவர்கள் புழு (ஆத்துமா) சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" (மாற்.9:48). அன்பு வாசகரே, நீ உன் ஆத்துமாவை எந்நிலைமையில் வைத்துள்ளாய். உன் ஆத்துமாவை உன் தேவனுக்கு ஒப்புக்கொடு. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (மாற்கு 12:30). அதற்குரிய ஞானத்தையும் முழுப்பலத்தையும் கர்த்தர் உமக்குத் தந்தருளுவாராக!

# நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

## Why We Have Vocal Music Only In Worship

*J.C.Choate*



கிறிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்கள் தம்மை துதிக்கும்படி விருப்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத்

துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு, அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது. அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக் கின்றது. பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால் தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்றஅவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது, உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை

நாம், "…. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார் மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன.

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை

பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது. அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டதில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந் தார்கள்" (அப்.16:26) என்று செல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு "என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" (யாக்.5:13) என்றார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் "அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்"

(வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, "...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது" (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். "..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே..." (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போமா அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமா அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்க நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்....." (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து, நித்திய பலி
# Jesus Christ, the Eternal Sacrifice

*-Betty Burton Choate*



## பண்டிகைகளின் நோக்கம்
## The Purpose of the Feasts

பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து யாத்திராகமத்திற்கும் தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி.11:26).

### கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்

**இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?**

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்லதரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்கள்ள நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, "பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்...." (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட சூசகமான ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் ".....அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினைக் தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். அவர்

தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார் அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக் குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது..."(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம் அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1கொரி.11:28,26).

(4) "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ...." (யோவா.6:54).

(5) "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்" (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு "சடங்காக" நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

## பொது அறிவுச் சோதனை

1. உலக சுற்றுலாதினம் என்று கடைபிடிக்கப்படுகிறது?
   அ) செப்டம்பர் 27 ஆ) மே 27 இ) ஏப்ரல் 27
2. மலரின் எந்தப் பகுதி கனியாக மாறுகிறது?
   அ) சூல்தண்டு ஆ) சூல்பை இ) சூல்
3. இண்டேலியம் கிடைக்கும் மாநிலம்?
   அ) கோவா ஆ) கொல்கத்தா இ) கேரளா
4. 'பஸதேனா' என்பது என்ன?
   அ) விண்வெளிக்கூடம் ஆ) சுற்றுலா தலம்
   இ) துறைமுகம்
5. உவமைக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
   அ) சுரதா ஆ) பாரதியார் இ) திரு.வி.கா.

விடைகள்:
1. செப்டம்பர் 27
2. சூல்பை
3. கோவா
4. விண்வெளிக்கூடம்
5. சுரதா

**வேதமே வெளிச்சம் — நீதிமொழிகள் 6:23**

## பேசும் வேதாகமம் - 23

★ இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றவர்கள் யார்? - இஸ்ரவேலர் - எண்.21;5.

★ உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல எதுவாங்குகிறவரும் அல்ல? - பரிதானம் - உபா.10:17.

★ கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் என்ன செய்யவில்லை? - தவறிப்போகவில்லை - யோசு.21:45

★ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றவன் யார்? - கிதியோன் - நியா.6:15.

★ கர்த்தருடைய பெட்டி யாருடைய வீட்டிலே மூன்றுமாதம் இருக்கையில் அவனையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்? - ஓபேத்ஏதோமின் - 2சாமு.6:11.

★ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னைவிற்றுப்போட்டாய் என்று எலியா யாரைப் பார்த்து சொன்னான்? - ஆகாப் - 1இரா.21:20.

★ சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்கு யாரை ஏவி விட்டது? - தாவீதை - 1நாளா.21:1.

★ கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தி யிருந்தவன் யார்? - எஸ்றா - எஸ்.7:10.

★ ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல்மதில் இடிந்துபோகும் என்றவன் யார்? - தொபியா - நெகே.4:3.

★ என் நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது என்றவன் யார்? - யோபு - யோபு9:25.

**உம்முடைய வேதம் சத்தியம் - சங்கீதம் 119:142**

பாடம் - 9

# பிரசங்கியார் பயிற்சி

## The Preacher's Training

J.C.Choate

சபையிலே சிறந்த தலைமைத்துவம் இருக்கும் படியாக வேதம் இதைக் குறித்து என்ன போதிக்கிறது என்பதைக் கற்று அதை வாழ்க்கையில்கொண்டு வரவேண்டும். எந்த ஒரு அமைப்பும் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டுமென்றால் அது நல்ல தலைமைத்துவத்தை உடையதாக இருக்க வேண்டும். கிறிஸ்து சபைக்குத் தலைவராக இருந்து அதனுடைய எல்லா அங்கத்தினர்களையும் தேவனுடைய வார்த்தையின்படி நடத்துகிறார் என்பது நமக்குத் தெரியும். அதோடு கூட அங்கத்தினர்கள் மத்தியிலே தலைமைத்துவத்தைக் குறித்து தன்னுடைய வார்த்தையில் குறிப்பிட்ட வழிமுறைகளை சொல்லியிருக்கிறார். அது சர்வாதிகார முறையிலே இருக்கக் கூடாது. ஆனால் இரண்டு அல்லது அதிகமான ஆண்கள் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களாக இருக்கவேண்டும். இந்த வேலைக்கு பிராந்திய சபையிலே தகுதியுள்ளவர்கள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எல்லா ஆண்களும் சேர்ந்து தகுதியுள்ளவர்கள் ஏற்படும் வரை தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும். மூப்பர்கள் இருக்கும் பட்சத்தில் ஊழியத்தில் அவர்களுக்கு உதவும்படியாக உதவிக்காரர்கள் இருக்க வேண்டும். உதவிக்காரர்களுக்குப் பிறகு பிரசங்கி, போதகர்கள் மற்றும் அங்கத்தினர்கள்.

பிரசங்கியார்கள் மூப்பர்களின் மேற்ப்பார்வையின் கீழ் ஊழியம் செய்த போதிலும் பிரசங்கியார்கள் அவர்கள் ஊழியம் குறித்து அதிக கவனம் செலுத்துவதன் நோக்கம் அவர்களுடைய வேலைகள் மிக அதிகமாக இருப்பதாலும் தேவனுக்கு செய்கிற ஊழியத்தை அதிக மேன்மையாக செய்ய அவர்களுக்கு உதவியும், ஊக்கமும் தேவை படுவதுமாகும். குறிப்பாக இளம் பிரசங்கியார்கள் சபையிலும் மக்களாலும் பொதுவாக மதிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தவரான நோக்கங்களுக்காக பிரசங்கிக்கிறார்கள் என்று சந்தேகிக்கப்படுவதாலே. இந்த விதமான போக்கு மாறினால்தான் சபையானது வளர்ந்து பரவ முடியும். நாம்நன்றாக பிரசங்கித்து ஆத்மாக்களை இரட்சிக்கப்படும்படி நடத்தி கிறிஸ்தவ சகோதர்கள் மத்தியிலே கர்த்தருக்கென்று ஊழியம் செய்யும் வாஞ்சையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய தீர்மானம் தங்களுடைய ஆத்மாக்களையும் மற்றவர்களுடைய ஆத்மாக்களையும் இரட்சிக்கும்படியான நல்ல நோக்கங்களின் அடிப்படையிலே இருக்க வேண்டும்.

இந்தக் குறிப்புகளை மனதில் கொண்டு இப்பொழுது பிரசங்கியார் பயிற்சியைப் பற்றி சிந்திப்போம்.

ஒருவர் நான் பிரசங்கியாராகப் போகிறேன் என்று சொல்லி பிரசங்கிக்க தொடங்கி விட்டால் மட்டும் போதாது. நிச்சயமாகவே விருப்பம் இருக்க வேண்டியது அவசியம் ஆனால் பிரசங்கிக்க விரும்புகிற நபர், தான் ஒரு வெற்றியுள்ள

பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்றால் அந்தப்பணிக்கு தன்னைத்தான் பயிற்றுவித்துக்கொள்ள அல்லது தயார் செய்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்ட ஒரு இளைஞனுக்கு கிறிஸ்தவப் பெற்றோர்கள் இல்லாத இளைஞனைவிட அனுகூலங்கள் அதிகம் கிறிஸ்தவ பெற்றோர்களோடு இருக்கக் கூடிய வாலிபன் கர்த்தருக்கேற்ற ஆலோசனையிலும், சிட்சையிலும், தேவனுடைய வார்த்தையிலும் போதிக்கப்பட்டு கவனமாக வளர்க்கப்படுவான் (எபே 6:4). அவன் நல்ல பயிற்சி பெற்று நல்ல பழக்க வழக்கங்கள் தனக்குள் வளரப்பெறுவான் அவன் தொழுகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வேதத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் உற்சாகப்படுத்தப்படுவான். பின்பு அவன் வளர்ந்த கிறிஸ்தவனாகி அநேக உதவிகளும் ஊக்கங்களும் பெற்று நல்ல அனுபவம் உள்ளவனாகி பிராந்திய சபையில் வகுப்புகளில் போதிக்கவும் குடும்ப ஜெபங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தேர்ச்சியுள்ளவனாவான்.

ஒருவன் கிறிஸ்தவ குடும்பத்தில் இருக்கும்படி ஆசீர்வதிக்கபடாமல் வாழ்க்கையில் பின்பு கிறிஸ்தவனாகி அல்லது பிரிவினை சபையிலிருந்து மன மாற்றம் அடைந்து பிரசங்கியாரானால் அவன் தானே தீர்மானித்து வேதத்தைக் கற்க வேண்டும். அல்லது அஞ்சல்வழி வேதாகம பயிற்சி மூலமாகவோ வேறு பிரசங்கியார் அல்லது சபையில் ஆர்வமுள்ள அங்கத்தினர் மூலமாகவோ வேதத்தை முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் வளர்ந்து தனிப்பட்ட முறையில் கல்வி கற்று கல்லூரிக்குச்சென்று படித்ததன் மூலமாக சிறப்பாக ஊழியஞ் செய்ய முடியும். நீங்கள் வேதத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று திட்டமிடுகிற ஒருவர் ஏன் கல்லூரிக்குச்சென்று கற்க வேண்டும் என்று கேட்கலாம்? ஏனென்றால் நன்கு படித்தவர்கள் மத்தியில் தனக்கென்று ஒரு செல்வாக்கை ஏற்படுத்த பரந்த அறிவு தேவை இயேசுவைப்பற்றி சொல்லும் போது கூட அவர் ஞானத்திலும், வளர்ச்சியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் வளர்ந்தார் என்று காண்கிறோம் (லூக் 2:5). அதனால் அவர் சட்ட அறிஞர்களோடும் வரிவசூலிப்பவர்களோடும் தன் காலத்திலிருந்து தலைவர்களோடும் நன்கு பேச முடிந்தது. குறிப்புகளிலே இவ்விதமாகக் காண்கிறோம். “அவர் வேதபாரகர் போல் அல்லாமல் அதிகாரம் உள்ளவராய் போதித்தார்” (மத் 7:29). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர் அறிவோடும் புரிந்து கொள்ளுதலோடும் தான் பேசுவது இன்னது நன்றாக புரிந்து பேசுகிறவர்கள் போல பேசினார் அதனால் கேட்டவர்கள் பிரமிப்படைந்து அவர் மீது அதிக மரியாதை வைத்தார்கள். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கு ஒருவர் மருத்துவப் பட்டம் பெற்றவராயிக்க வேண்டியதில்லை. அதே சமயத்தில் அவர் விஷயங்கள் அறியாதவராகவும் இருக்க கூடாது. பவுல் சிறந்த கல்விமான், லூக்கா ஒரு மருத்துவர். அப்போஸ்தலர்களில் பலர் தனிப்பட்ட கல்வி அறிவு இல்லாதவர்களாகவே இருந்தார்கள். அது உண்மைதான் ஆனால் அவர்களுக்கு குழந்தைகளுக்குரிய அடிப்படைக் கல்வி இருந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் பிரதான போதகரான இயேசுகிறிஸ்துவால் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

ஆகவே உங்களை ஒரு நல்ல கல்வி தகுதியோடு தயார் செய்யுங்கள். உங்கள் பகுதியிலே சகோதரர்கள் வேதாகம பள்ளியியோ, கல்லூரியோ பிரசங்கியார் பயிற்சி பள்ளியோ நடத்தினால் அங்கு சென்று பயில முயற்சியுங்கள். இவைகள் உங்களுக்கு கிடைக்காவிட்டால், சபைகள் வளர்ந்து இந்த வாய்ப்பு உங்கள் பிள்ளைகளுக்கு அல்லது அவர்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கும். உங்களைப் பொறுத்தவரையில் உங்கள் வேதாகமத்தை நன்றாக கற்கலாம். அதோடு கூட மற்ற சரியான கிறிஸ்தவ புத்தகங்கள் அல்லது பிரதிகள் கிடைக்குமென்றால் அவைகளை உங்கள் நூலகங்களில் சேர்ந்து படிக்கலாம். ஒவ்வொரு பிரசங்கியார் வளர்ச்சிக்கும் படிக்க வேண்டுமென்ற தனிப்பட்ட அர்பணிப்பு முக்கியம்.

ஒருவர் தன்னுடைய வேதாகம அறிவைக் கூட்டிக்கொள்ள வேண்டுமென்றால் போதிப்பதன் மூலமும் தனிப்பட்ட முறையில் படித்து மற்ற பெரிய சபைகள் நடத்துகின்ற அஞ்சல் வழி பாடங்களை மதிப்பீடு செய்வதன் மூலமும் பெருக்கி கொள்ளலாம். வேத வசனத்திற்கு ஒத்த வசனங்களை கண்டுக்கொள்ள உதவியாயிருக்கும்படி ஒரு ஒத்த வாக்கிய புத்தகத்தை பெற்றுக்கொள்ள முயற்சிங்கள். நீங்கள் புறப்பட்டுச் சென்று உங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கு ஏற்றபடி உங்கள் கிராமத்திலோ நகரத்திலோ அல்லது பெரு நகரத்திலோ அல்லது உங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலோ பிரசங்கியுங்கள் உங்களை சுற்றி சபைகள் இருந்தால் அங்கே சென்று பிரசங்கிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். அப்படியில்லாவிட்டால் நண்பர்கள் அல்லது விருப்பம் உள்ளவர்கள் மத்தியில் கூடுகைகளை ஏற்படுத்தலாம். இந்த முயற்சியினால் நீங்கள் கற்று வளர்வதோடு, மற்ற மக்களை கிறிஸ்துக்குள் மனமாற்றி உங்கள் பிராந்திய சபைமூலமாக புதிய சபைகளை தொடங்கலாம். நீங்கள் சில காலம் பிரசங்கியராக இருந்தாலும் உங்கள் வேதஅறிவு வளர்ச்சியடையும்படியாக தொடர்ந்து படிக்கவேண்டும். உங்கள் பிரசங்கங்களை முன்னதாகவே தயார் செய்து விடுங்கள். பேசுவதற்கும் கேட்பதற்கு பிரயோஜன முள்ளவைகளைச் சொல்வதற்கும் வித்தியாசமுண்டு. நீங்கள் பிறவிப்பிரசங்கியல்ல ஆனால் உண்மையான முயற்சியின் மூலம் அப்படி ஆகவேண்டும் உங்கள் பாடத்தைக் குறித்து சோம்பலாயும் கவலையற்றும் இருக்க வேண்டாம். நீங்கள் தேவனுடைய வார்த்தையை போதிக்கிறீர்கள் என்றும் மற்றவர்களுக்கு வெற்றிகரமாக போதிப்பது என்றால் நீங்கள் அதை நன்றாக கற்றிருக்க வேண்டுமென்றும் நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய பணியின்போது கேட்கப்படும் கேள்விகளுக்கும் கள்ளப் போதகங்களை கையாளுவதற்கும் நீங்கள் வேதத்தை நன்கு கற்றிருக்க வேண்டியது அவசியம்.

அன்பாகயிருங்கள் அதே சமயத்தில் உறுதியாயிருங்கள். அதே சமயம் மென்மையாயிருங்கள். உண்மையாயிருங்கள் அதே சமயம் சிரித்த முகத்தோடிருங்கள் பிரசங்கிப்பதிலே அநேகவேளைகள் பொறுப்புகள் அடங்கியிருக்கிறது. நீங்கள் நீச்சயமாகவே ஒரு நல்ல பிரசங்கியராக கடினமாக உழைத்து கர்த்தருக்கென்று கனிகொடுப்பவராக இருக்க விரும்புவீர்கள். நீங்கள்

தேவன் விரும்புகிற விதமான பிரசங்கியாராகயிருக்க வேண்டுமென்றால் மக்களை கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்தும் செல்வாக்குள்ளவராகவும், உங்களை அறிந்த மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். மேலும் உங்களை அறிந்த வாலிபர்கள் உங்கள் வாழ்க்கையையும், வழிமுறைகளையும், தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற விரும்புவார்கள்.

## வேதஅறிவுப்போட்டி எண் 73—ல் வெற்றிபெற்றவர்கள்

S.வித்யாராணி -சென்னை
G.P. ஏசையன் ராஜ் -கோபி
G. பூங்கோதை -வெள்ளாளபாளையம்
S. ராஜாபிரசாத் - மதுரை
G. கிரேஸ்ஜெயா -வெள்ளக்குளம்
R. பிளசன் -வெளிப்பாளையம்
K. அன்பழகன் -வெளிப்பாளையம்
IRA. எதிராசன் -சங்ககிரி
R. ஆனந்தகுமார் -கடுக்கம்பாளையம்
N. விஜயநாத் -Bகுமாரபாளையம்
K. கோமதி -க.வெட்டுப்பாளையம்
S. ஆனந்தராஜ் -கோவை
A. ஆனந்த் -நாகமலை
K. மோகன் -B.குமாரபாளையம்
P. அலிஸ்மேரி -வத்தலக்குண்டு
V. கிருபாஈவிலின் -விருதுநகர்
S. சாம்பிச்சை - நாமலை
P.S. லலிதாபிரேமகுமாரி -மதுரை
E. ஜோசப்தேவதாஸ் -நாகமலை
C. ஜாய்கிறிஸ்டினா -நாகமலை
J.S. நிர்மலா ஜான் -மதுரை
S. கிரேஸ்மேரி -முன்னூர்

## வேதஅறிவுப்போட்டி எண் 73—ன் விடைகள்

1. மெல்கிசேதேக்குக்கு-ஆதி.14:20
2. பிதா -கொலோ.1:13
3. தாவீது -சங்.110:5
4. தீமோத்தேயுவுக்கு -2தீமோ.2:3
5. பிரயோஜனமுண்டு, வறுமையை, - நீதி.14:23
6. அடையாளத்தை, ஞானத்தை -1கொரி.1:22
7. அருவருப்பானவைகள் -உபா.23:18
8. பாவம் -ரோமா.6:14
9. எலிசா -2இரா.13:14
10. புரட்டினார்கள் -அப்.15:24

## ஜெபியுங்கள்

- தஞ்சை ஊழியர் சகோ. ஜான்சுவாட்ஸ் உடல்நலம் பெற...
- இம்மாதம் நடைபெறவுள்ள 24 வது வாசகர் கருத்தரங்கிற்காக...
- கொடைக்கானலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊழியத்திற்காக...
- புதுவை ஊழியர் சகோ. வென்டஸ் சுகத்திற்காக...



# முதலிடம் நோக்கி...

-S.Sengolrayan



மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அழிந்துபோகும் தன்மையுள்ள வெளிப்புறமான, தற்காலிகமான சரீரத்தையும், என்றென்றும் அழிவில்லாத ஜீவனும்,உணர்வும் உள்ள உள்ளான தன்மைகளான மேன்மையான ஆத்துமாவையும் உடையவர்களாக இருக்கிறோம். எனவே நம்மில் ஒவ்வொருவரும் சரீரப்பிரகாரமான தேவைகளையும் அதாவது உணவு, உடை, இருப்பிடம், கல்வி வேலைவாய்ப்பு, திருமணம், பிள்ளைப்பேறு, நோயற்ற ஆரோக்கியமான உடல் நலம், குடும்ப முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, சமுதாய அந்தஸ்து போன்ற இவ்வுலகத்திற்குரிய தேவைகளையும், ஆன்மீகப்பிரகாரமான பாவ மன்னிப்பு, இரட்சிப்பின் நிச்சயம், தேவ சமாதானம், ஜீவனுள்ள மெய் தேவனோடுள்ள ஐக்கியம், ஆவியின் அச்சாரம், முழுமையான தேவ பாதுகாப்பு, மெய்யான சந்தோஷம், பாவத்தை மேற்கொள்ளக்கூடிய கிறிஸ்துவின் பெலன், சோதனையில் வெற்றி, தேவ சாயலில் பூரணமாகுதல், நித்திய ஜீவன் போன்ற மறுமை வாழ்வுக்குரிய ஆவிக்குரிய தேவைகளையும் உடையவர்களாக இருக்கிறோம். இவ்விரண்டு விதமான தேவைகளில் நிலையற்றும், அழிந்துபோகக்கூடியதுமான சரீர தேவைகளைவிட என்றென்றும் அழிவில்லாததும், நிலைத்து நிற்கிறதுமான உன்னதமான ஆத்துமாவைப் பற்றியதான ஆவிக்குரிய தேவைகளுக்கே முதலிடமும், முக்கியத்துவமும் கொடுக்கவேண்டும்.

ஏனெனில் ஆகாரத்தைப் பார்க்கிலும், ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும், சரீரத்தைப் பார்க்கிலும் ஆத்துமாவும் விசேஷித்தவைகளாயிருக்கிறது (லூக்.12:13; மாற்கு8:35,36). நாம் கவலைப்படும் அநேக காரியங்கள் அற்பமானவைகளாகத்தான் இருக்கின்றன. அற்பமான சரீர தேவைகளுக்காக மட்டுமே கவலைப்படுவது மதியீனம் (லூக்கா10:38-42) நமது வாழ்க்கைப் பயணத்தில் நம்முடைய ஆத்தும இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் தாம் மாம்சத்தில் இருந்த நாட்களில் சரீர தேவைகளைவிட, ஆத்துமாவுக்குத் தேவைப்படுகின்ற ஆவிக்குரிய காரியங்களுக்கே முதலிடமும், முக்கியத்துவமும் கொடுத்து உபதேசித்தார் (மாற்.2:1-10; லூக்.5:1-4; 10:38-42; மத்.4:4). மேலும், அற்பமான சரீர தேவைகளுக்காக மட்டுமே அநுதினமும் அல்லற்பட்டு பிரயாசப்படுகிறவர்களுக்கு ஆண்டவர் இயேசு கூறிய அருமையான

ஆலோசனையைக் கவனியுங்கள். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் (சரீரத்தேவைகளெல்லாம்) உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" (மத்.6:33).

முழு உலகமும் பாதுகாப்பையும், மெய்யான சந்தோஷத்தையும் நிலையான சமாதானத்தையும், பாவ மன்னிப்பையும், தேவனோடுள்ள ஐக்கியத்தையும் நாடி தேடி அலைகிறது. ஆனால் அநேகர் தங்களுடைய சுயபெலத்தினாலும் சுயபுத்தியினாலும், பணபலத்தினாலும், மனிதனால் உண்டாக்கப்பட்ட மதங்களின் பெயராலும் தங்களுடைய ஆவிக்குரிய தேவைகளை அடைய முயற்சித்து, பிறகு தோல்வியையும், ஏமாற்றத்தையுமே அடைகின்றனர். நாம் விரும்பும் பொருள் எங்கே, யாரிடத்தில் இருக்கிறதோ அங்கே அவரிடத்தில் தான் நாம் அதைப்பெற்றுக்கொள்ள முடியும். இயேசு கிறிஸ்துவே உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தையும், பாவமன்னிப்பையும், நித்திய ஆறுதலையும் தரவல்லவர் (யோவா.14:27; மத்.11:28-30; அப்.4:12) ஆவிக்குரிய உன்னதமான ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் மட்டுமே உண்டு (எபே.1:3). எனவே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியும் எந்த நபரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறான் (2கொரி.5:17; ரோம.15:29). ஆனால் கிறிஸ்துவண்டை வர விரும்பும் நபர் இந்த உலக வாழ்க்கைக்குரிய சரீர நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்தால், மற்ற எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்பார் (1கொரி.15:19). எனவே அழிந்துபோகிற சரீர நன்மைகளுக்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற ஆவிக்குரிய ஆத்தும தேவைகளுக்காவே நாம் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் (யோவா.6:27; 20:30,31).

இன்றைய மார்க்கபேத உலகில் கிறிஸ்து எவ்விதமாகப் பிரசங்கிக்கப்படுகிறார்? சரீர நோய்களை குணப்படுத்தும் மருத்துவராகவும், தீராத வியாதிகளைத் தீர்க்கும் சஞ்சீவியாகவும், கெட்டஆவிகளையும், பிசாசுகளையும் துரத்தும் மாந்திரீகராகவும், வறுமை, பசி, பஞ்சம், கடன் தொல்லை, கஷ்டம், இவைகளை நீக்கும் செல்வச் சீமானாகவுமே அறிவிக்கப்படுகிறாரேயன்றி, பாவிகளை இரட்சிக்கும் உலக இரட்சகராகவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே நம்மை தேவனிடத்தில் சேர்க்கும் கிருபாதார பலியான தேவகுமாரனாகவும் பிரசங்கிக்கப்படுவதில்லை. இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவுமே கிறிஸ்து வந்தார் என்ற பிரதான நோக்கத்தை மறைத்து, தெய்வீக சுகமளித்தல் என்ற பெயரில் சரீரத்துக்கடுத்தவைகளுக்கே முதலிடம் கொடுத்து, சரீர நன்மைகளையே பிரதானமாகப் போதித்து சிலுவையைப் பற்றிய உபதேசத்தை குழி தோண்டி புதைத்து, முதல் நூற்றாண்டின் கிறிஸ்தவத்தை சிதைத்து விட்டனர். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் எனும் சுவிசேஷத்தால் உண்டாகும் இரட்சிப்பின் வல்லமையை மறுதலித்து (2தீமோ.3:5) மனுஷ

ஞானத்திற்குரிய நயவசனிப்பான பேச்சுகளினாலும், கவர்ச்சியான தந்திரமுள்ள போதகத்தினாலும் ஆத்துமாக்களை வஞ்சிக்கின்றனர். இப்படிப்பட்ட கள்ளப்போதகர்கள் சரீர நன்மைகளையும், உலகத்துக்குரியவைகளையும் பேசுவதால் உலகமும் அவர்களுக்குச் செவி கொடுக்கிறது (1யோவா.4:15).

நம்முடைய வாழ்க்கையில் அற்பமான சரீர காரியங்களை விட அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உன்னதமான ஆவிக்குரிய தேவ பக்திக்கேற்ற காரியங்களுக்கே நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். ஏனெனில் சரீரமுயற்சி அற்பபிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப்பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (1தீமோ.4:8). சரீரத்தில் நாம் வாழும் வாழ்க்கை கொஞ்ச காலம் மட்டுமே. நாம் இந்த உலக வாழ்க்கைக்காகவும், சரீர தேவைகளுக்காகவும் பிரயாசப்பட்ட எதுவும் நம்மோடு கூட வருவதில்லை (1தீமோ.6:7). நம்முடைய சரீர மரணத்திற்குப் பிறகு நம்முடைய நித்தியத்தை எங்கே கழிக்கப்போகிறோம்? நித்திய ஆக்கினை மற்றும் நித்திய ஜீவன் இவ்விரண்டில் நாம் இவ்வுலக வாழ்க்கையில் எதற்கு முதலிடம் கொடுக்கிறோமோ அதைப் பொறுத்தே நம்முடைய நித்தியம் தீர்மானிக்கப்படும். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் (கலா.6:8).

கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் ஆவிக்குரிய மறுபிறப்பு அடைந்த அநேக தேவபிள்ளைகள் ஆரம்பகாலத்தில் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுத்து உன்னத நோக்கங்களுடன் ஆவிக்குரிய வாழ்க்கையை உற்சாகமாய் துவங்குகின்றனர். ஆனால் விரைவிலேயே முக்கியத்துவம் இல்லாத உலக காரியங்களுக்கு கவனம் செலுத்தி அநித்தியமான பாவசந்தோஷங்களினால் கவர்ந்திழுக்கப்பட்டு, பற்பல இச்சைகளில் வீழ்ந்து ஆத்துமாவில் சோரம் போய்விடுகின்றனர். தேமா உலகத்தை நேசித்து ஜீவபாதையிலிருந்து விலகிச்சென்றதைப் போல (2தீமோ.4:10) தங்கள் விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தி விடுகின்றனர் (1தீமோ.1:19). ஆவியினாலே ஆரம்பம் பண்ணின இவர்கள் மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறவர்களாக காணப்படுவது எத்தனை புத்தியீனம்? (கலா.3:3). நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு எதிரிடையாக இருக்கும் எந்தவொரு லௌகீக இச்சைகளையும் (கலா.5:24) நம்முடைய ஆத்துமாவை நஷ்டப்படுத்தும் எந்தவொரு சரீரப்பிரகாரமான தடைகளையும் தகர்த்தெறியவேண்டும் (லூக்.9:59-62). கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஆண்டவரோடுள்ள உறவில் வாழாவிட்டால் நமது வாழ்க்கை ஏதேனும் ஒரு பலவீனத்தையோ அல்லது பாவத்தையோ சார்ந்திருக்கும். நியாயப்பிரமாண காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் விளைச்சல்களில் முதல் பலனை, மற்றும் முதல் தரமானவைகளை தங்கள் தேவனுக்குச் செலுத்தும்படி கட்டளை பெற்றிருந்தனர் (யாத்.22:29; 23:19;

லேவி.23:10). வாக்குதத்தமுள்ள முதலாம் பிரதான கற்பனை யாதெனில், உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவதேயாகும் (மாற்.12:30).

புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் அநுதினமும் தேவனோடு உள்ள உறவுகளுக்கே முதலிடமும், வாரத்தின் முதல் நாளில் ஆராதனைக்கு முதலிடமும், நம்முடைய வருமானத்தில் முதல் பகுதியை கர்த்தருடைய ஊழியத்திற்கு முதலிடமும், அன்றாட நடைமுறையில் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு முதலிடமும், நம்முடைய வாழ்க்கையின் எல்லா தரப்பிலும் ஆவிக்குரிய நித்தியமானவைகளுக்கே முதலிடமும், நம்முடைய இருதயத்தில் தேவனுக்கே முதலிடம் தந்து தேவசித்தப்படி வாழ்ந்து கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ள ஓட்டத்தை ஓடி முடிக்க சர்வவல்ல தேவன் தாமே கிருபை செய்வாராக!

# சபை அங்கத்தின் சமாசாரம்

## The matter of Church Membership

*-John Thiesen*

**கேள்வி:** சபை அங்கத்தினனாய் மாறாமல் நான் கிறிஸ்துவின் சீஷனாக இருக்க முடியுமா?

இல்லை, இது இயலாதது. கிறிஸ்து தம்சபையிலிருந்து பிரிந்திருக்க முடியாது என்பதே இதன் காரணம். இது "அவருடைய சரீரம்" அவருடைய நிறைவாகிய சபை" (எபே.1:23).

தேவன் உலகமுண்டானது முதற்கொண்டே சபையைத் திட்டம்பண்ணினார். அவர் சபையாகிய ஒரே சரீரத்தில் யூதர்களையும் புறஜாதிகளையும் இரட்சிக்க திட்டமிட்டார் (எபே.1:23).

இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என வேதாகமம் கூறுகிறது (அப்.2:47). சபையானது கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்ப வந்து தங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களாலும் உருவாக்கப்பட்டது (அப்.2:38,41,47)

சபையல்ல, கிறிஸ்துவே இரட்சிக்கின்றார் என்பது உண்மையாக இருந்தபோதிலும், நாம் சபைக்கு வெளியே இருந்து கொண்டு இரட்சிக்கப்பட முடியாது. ஏனென்றால் இது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது! கர்த்தர் நம்மை இரட்சிக்கிற போது, நாம் தாமாகவே அவருடைய சபையாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மாறுகின்றோம்.

*-The Voice Of Truth International*




# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



அப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள் சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைத் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன் படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா4:24)**

## வேத அறிவுப் போட்டி எண்:74

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. வேலை செய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை எப்படியிருக்கும்?
2. கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்த அதிபதி யார்?
3. எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை எவற்றைப் போலாக்குகிறார்?
4. தேவன் தாம் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரா?
5. இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிறவழியே போகிறேன் என்றவன் யார்?
6. தலைமயிர் ஸ்திரீக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?
7. புருஷரின் உடைகளை ஸ்திரீகள் என்ன செய்யலாகாது; ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர்கள் என்ன செய்யலாகாது?
8. தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், எவருக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்?
9. தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்து விழுந்த பிள்ளையைப்போல அவள் ஆகாதிருப்பாளாக என்று வேண்டியவன் யார்?
10. உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்கள் எவர்கள்?

## நடப்புச் செய்திகள்

- நோயாளியின் நகத்தை பார்த்தே என்ன நோய் தாக்கியுள்ளது என்று கண்டு பிடித்துவிடலாம் என்று இங்கிலாந்து டாக்டர் ஜான்கன்டர் கூறியுள்ளார்.
- அமெரிக்கா செல்வதற்கான விசாமுறைகள் எளிதாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதர் டேவிட் முல்போர்டு தெரிவித்துள்ளார்.
- தகுதி உள்ள எந்த ஒரு வீரருக்கும் இந்திய கிரிக்கெட் அணியின் கதவு திறந்தே உள்ளது என்று இந்திய தேர்வுக்குழுத் தலைவர் வெங்சர்க்கார் கூறியுள்ளார்.
- 2007-ம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்து கிராமபஞ்சாயத்துகளுக்கும் அகண்ட அலைவரிசை இணைப்பு வழங்கப்படும் என்று மத்திய மந்திரி தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார்.
- சென்னையில் பட்டாசுக்கடைகளுக்குப் புதிய நிபந்தனைகளை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2006-2008 Licensed to Post without prepayment
License No. TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th October 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.




## கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202 திண்டுக்கல் மாவட்டம்
போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in


"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**



திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 மணிமுதல் 6-30 மணிவரை பாருங்கள்

மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்
(கொழும்பு சர்வதேச வானொலி) MW 873 Khz-ல்
ஒவ்வொரு வியாழன் காலை 7-15 மணி முதல்
7-30 மணிவரை கேளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் ஆண்டு சந்தா**
இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India